### த.வெ.க. அராஜகத்தைக் கண்டும் காணாமல் இருப்பதா?

# தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு, காவல்துறை இருக்கிறதா ?

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

தூத்துக்குடி, ஜூலை 28 -

**நாட்டில் சட்டம் ஒழுங்கு, காவல்துறை இருக்கிறதா ? இல்லையென்றால் சிலருக்கு மட்டும் செயல்படுவதாக காவல்துறை மாறி விட்டதா ? என கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.**



தூத்துக்குடி மாவட்டம் - மடத்தூர் பகுதியைச் சேர்ந்த ஜெயபாண்டியனின் மகன் லிங்ககுமாருக்குச் சொந்தமான 30 செண்ட் நிலத்தில் தற்போது கடைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், கோவில்பட்டியைச் சேர்ந்த துளசி அம்மாள், போலி ஆவணங்கள் மூலம் அந்த நிலத்தை பத்திரப்பதிவு செய்து அபகரிக்க முயன்றதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பான வழக்கில் தூத்துக்குடி சப் - கோர்ட், துளசி அம்மாளின் மனுவை தள்ளுபடி செய்து லிங்ககுமாருக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது.

ஆனால், அதே நிலத்தை துளசி அம்மாள் மீண்டும் தூத்துக்குடியைச் சேர்ந்த சங்கரலிங்கம் உள்ளிட்டோருக்கு பத்திரப்பதிவு செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சங்கரலிங்கத்தின் ஆதரவாளராகக் கூறப்படும் தமிழக வெற்றிக் கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜேசுதாஸ், வழக்கறிஞர் சேசு உள்ளிட்டோர் ஜே.சி.பி. இயந்திரத்துடன் அத்துமீறி நுழைந்து, லிங்ககுமார் கட்டி வந்த கட்டடத்தை இடித்ததாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக லிங்க குமார் சிப்காட் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். ஆனால் காவல்துறையினர், புகார் அளித்த தமிழக வெற்றிக் கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜேசுதாஸ் மற்றும் சங்கரலிங்கம் மனோகர், வழக்கறிஞர் சேசு ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யாமல் காலம் தாழ்த்தி வருவதாகக் கூறப்படுகிறது. மேலும் லிங்க குமார், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் லிங்ககுமாரை, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நேரில் சென்று பார்த்து ஆறுதல் தெரிவித்தார்.

அப்போது செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய அவர் குறிப்பிட்டதாவது:-

லிங்ககுமார் அவர்களுடைய இடத்தில் கட்டியிருக்கக்கூடிய கடையை இடிக்க வேண்டும், அந்த இடம் வேண்டும் என்று வழக்கறிஞர் தாஸ் என்பவர் அந்தக் குடும்பத்திற்கு மிரட்டல் விடுத்துக்கொண்டு இருக்கிறார்.

அதுமட்டுமில்லாமல், காவல் நிலையத்தில் புகார் அளிக்க லிங்ககுமார் பலமுறை முயற்சி செய்து இருக்கிறார்.ஆனால், காவல்துறை புகாரை எடுக்கத் தயாராகவே இல்லை. குற்றம் நடந்த அன்று, லிங்ககுமார் கடை கட்டியிருக்கக்கூடிய இடத்திற்கு ஜேசிபி வண்டியைக் கொண்டு வந்த தாஸ், அவருடன் பல பேரை அழைத்துக்கொண்டு கடையை இடித்துள்ளார்.

மேலும் தடுக்கப்போன லிங்க குமார், அவருடைய மனைவி, 19 வயது மகள், 16 வயது அவருடைய மகன் - இவர்கள் எல்லாரும் தாக்கப்பட்டனர். ஆனால், முதல் தகவல் அறிக்கையில் யார் தாக்கினார்கள் என்பது இல்லை.

அதுமட்டுமின்றி , அவர்கள் துப்பாக்கியை வைத்து மிரட்டியதாக லிங்ககுமார் கூறியுள்ளார். ஆனால், முதல் தகவல் அறிக்கை பதியப்படவில்லை, காவல்துறை மறுத்துள்ளதாக குற்றம் கூறுகிறார்.

மேலும், தாக்கப்பட்ட சிறுவனுக்கு 18 வயது கூட ஆகவில்லை. சிறுவர்களுக்கு எதிரான குற்றம் என்பது பதியப்பட வேண்டும். எனவே தாஸ் மீது வழக்குப் பதியப்பட வேண்டும். ஆனால் அதையும் காவல்துறை செய்யவில்லை.

அதுமட்டுமின்றி, அவர்களுடைய மகள் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். கத்தி, கம்பி போன்ற ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதால் கைகளில் காயம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு நடவடிக்கை எடுக்கவோ, நியாயமான முதல் தகவல் அறிக்கை பதிவோ இல்லை. ஏனென்றால், தாஸ், ஆளுங்கட்சியான தமிழக வெற்றிக் கழகம் கட்சியைச் சேர்ந்தவர். அதனால் காவல்துறை அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதற்குத் தயாராக இல்லை.

ஏற்கனவே நானும், முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன், தூத்துக்குடி மேயர் ஜெகன் மூவரும் சமீபத்தில் ‘லாக் அப்’ மரணம் அடைந்த அருணாசலம் வீட்டிற்குச் சென்றோம். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களைச் சந்தித்தோம்.

அப்போது மர்மமான முறையில் உயிரிழந்து உள்ளதாகவும், எந்தவிதத் தெளிவும் இல்லாமல், என்ன நடந்தது என்று பெற்றோர்களுக்குத் தெரியாமல், மூடுமந்திரமாகத்தான் கதைகள் ஜோடிக்கப்படுகிறது எனவும் கண்ணீருடன் தெரிவித்தனர்.

ஒவ்வொரு முறையும் யாராவது தாக்கப்படும் போது கன்னியாகுமரியில் நடந்த சம்பவம், இந்தச் சம்பவம், என இரண்டிலும் சம்பந்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களை குற்றவாளிகளாக, தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்களைப் போல பல கதைகளை ஜோடிக்க முற்படுகிறார்கள். இது மிகவும் தவறான நடவடிக்கையாகும்.

அருணாசலத்தின் குடும்பத்தினர், “எங்களை காவல்துறை தொடர்ந்து பயமுறுத்துகிறது” என்கிறார்கள். “உங்கள்மேல் வழக்கு போடுவோம், நீங்கள் நியாயம் கேட்டுப் போராடினால் கைது செய்வதற்கு நாங்கள் தயங்க மாட்டோம்” என்றெல்லாம் காவல்துறை கூறுகிறது. இதனால் அவர்கள் பயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய சூழல் நிலவுகிறது.

மகனை இழந்த குடும்பம் பயத்தோடும், அச்சுறுத்தலோடும் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழலைப் பார்க்கிறோம். காவல்துறையை நேரடியாக வைத்துக் கொண்டிருக்கக் கூடிய முதலமைச்சர், இவை எதற்கும் பதிலளிக்கவில்லை.

அதிலும், லிங்ககுமாரின் குடும்பம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். முதல் தகவல் அறிக்கைகூட பதிவு செய்யப்படவில்லை, ஆளுங்கட்சியைச் சேர்ந்த நபர் ஈடுபட்டுள்ளதால், தூத்துக்குடியில் இருக்கக்கூடிய காவல்துறை - இவர்களுக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கக்கிறது.

மேலும் நாட்டில் சட்டம் - ஒழுங்கு, காவல்துறை இருக்கிறதா ? இல்லையென்றால் சிலருக்கு மட்டும் செயல்படுவதாக காவல்துறை மாறி விட்டதா என்பது தெரியவில்லை.

ஒரு நாளில் எத்தனை பிரச்சினை நடக்கும் என்ற கணக்கே இல்லை என்ற சூழலில் தமிழ்நாடு போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் முதல்வர் இதற்கும், ‘அமைதிதான் தனது பதில்’ என்கிறார்.

இதற்கு மன்னிப்புச் சொன்னால் போதாது, மன்னிப்பு கேட்டால் போதுமா என்றெல்லாம் கேட்டவர். தற்போது பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பை கூட (முதலமைச்சர்) கேட்கத்தயாராக இல்லை. சென்ற ஆட்சிக் காலத்தில் நேரடியாக அமைச்சர் அனுப்பப்பட்டார். அந்தக் குடும்பத்திற்கு நியாயம் வழங்கப்பட்டது. அங்கே குற்றத்தில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இன்று இவர்களிடம் பேசவில்லை, ஆறுதல் கூறவில்லை. பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கு த.வெ.க.வில் யாரும் தயாராக இல்லை.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.

### உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை மீற முயற்சிக்கிற

# கர்நாடகா வலையில் தமிழ்நாடு சிக்கிவிடக்கூடாது!

## தஞ்சாவூர் விவசாயிகள் வலியுறுத்தல்!

தஞ்சாவூர், ஜூலை. 28–

உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை மீற முயற்சிக்கும் கர்நாடகாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் பலியாகக் கூடாது என தஞ்சை விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

காவிரி நீரை திறந்து விடாமல் டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதியாக மாற்ற முயற்சிகள் நடைபெறுவதாக விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஜூன் மாதம் 12ம் தேதி தஞ்சை டெல்டா மாவட்டங்களின் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையை திறந்திருந்தால், தற்போது டெல்டா மாவட்டங்களில் நாற்றுகள் வளர்ந்து பசுமை போர்த்தியதுபோல் வயல்வெளிகள் பச்சைப்பசேல் என்று காட்சி தந்திருக்கும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

ஆனால், தண்ணீர் திறக்கப்படாததால், மாடுகளுக்கு கூட தீவனப்பற்றாக்குறை ஏற்பட்டு டெல்டா வறண்டு கிடப்பதாக விவசாயிகள் கூறினார்.

இதனிடையே, காவிரி நீர் விவகாரம் தொடர்பாக கர்நாடக முதலமைச்சரை, தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் சந்திக்க இருப்பதாக செய்திகள் வெளியான நிலையில், உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை மீற முயற்சிக்கும் கர்நாடகாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் பலியாகி விடக் கூடாது என தஞ்சை விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கர்நாடக விரிக்கும் வலையில் தமிழ்நாடு முதலமைச்சர் சிக்கிக்கொண்டால், தமிழக விவசாயம் அழிந்துவிடும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

### சேலம் மத்திய மாவட்டம் - வெள்ளாளபட்டி பகுதியில்

# த.வெ.க.வைச் சேர்ந்த 75-க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## முன்னாள் அமைச்சர் இரா.ராஜேந்திரன் முன்னிலையில்!



சேலம், ஜூலை 28-

சேலம் அருகே உள்ள வெள்ளாளபட்டி பகுதியில் தவெக வை சேர்ந்த இளைஞர் அணி மற்றும் மாணவர் அணியை சேர்ந்த 75 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அக்கட்சியில் இருந்து விலகி முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் முன்னிலையில் திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்

சேலம் மாவட்டம் கருப்பூர் அருகே உள்ள வெள்ளாளபட்டி பகுதியில் தமிழக வெற்றி கழகத்தில் செயல்பட்டு வந்த இளைஞர் அணியை சேர்ந்த முஷ்ரப் மற்றும் மாணவரணி சேர்ந்த பாலா ஆகியோர் தலைமையில் அக்கட்சியை சேர்ந்த இளைஞர் அணி மற்றும் மாணவர் அணியினர் 75 க்கும் மேற்பட்டவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணையும் நிகழ்ச்சி சேலம் மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் மாளிகையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ராஜேந்திரன் கலந்து கொண்டு புதிதாக கட்சியில் இணைந்தவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்று பேசினார்.

திமுக அனைத்து மக்களுக்குமான இயக்கமாக செயல்பட்டு வருவதாகவும் தமிழ்நாட்டில் பல்வேறுவளர்ச்சிதிட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாடு முன்னேற்றம் அடைய காரணமான இயக்கம் என்றும் இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதாக கூறினார்.

நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட அவை தலைவர் சுபாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன், மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை செயலாளர் செல்லதுரை, ஒன்றிய செயலாளர் பால சுப்ரமணி, முன்னாள் இளைஞர் அணி ஒன்றிய அமைப்பாளர் சண்முகம் சேலம் மாநகர செயலாளர் ரகுபதி, மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் தாமரைக்கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர்.

### 5 வாரங்களில் காவல்துறை சித்ரவதைக்கு 4 பேர் பலி!

# நடவடிக்கை எதையும் எடுக்காமல் - 10வது மாடிக்குத் தனது அலுவலகத்தை மாற்றுவதற்கு முக்கியத்துவம் தருவதா?

## முதல்வர் ஜோசப் விஜய்க்கு தி.மு.கழக ஐ.டி. பிரிவு கண்டனம்!

சென்னை, ஜூலை 28 -

தமிழ்நாட்டில் கடந்த 5 வாரங்களில் காவல்துறையினரின் சித்ரவதைக்கு 4 பேர் பலியாகி உள்ளனர். ஆனால் அது பற்றி நடவடிக்கை எடுக்காமல் தனது முதலமைச்சர் அலுவலகத்தை கடல் காட்சியுடன் இருப்பதற்காக மாற்றுவதற்கு முக்கியத்துவம் தருகிறார் முதலமைச்சர் ஜோசப் விஜய் என்று குறிப்பிட்டு தி.மு. கழக ஐ.டி. பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

காவல்துறையின் துஷ்பிரயோகத்தால் நிகழும் லாக்கப் மரணங்கள். கடந்த 13ம் தேதி, நாகர்கோயிலில் குட்கா வழக்கில் கைது செய்யப்பட்ட மாற்றுத்திறனாளி சபரிவர்மனின் லாக்கப் மரணம், மாநிலத்தையே உலுக்கியது.

இந்த அதிர்ச்சி ஓய்வதற்குள், கடந்த 23ம் தேதி தூத்துக்குடியில் சட்டவிரோதமாக மது விற்றதாக கூறி, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 24 வயது இளைஞர் அருணாசலம், போலீசார் தாக்கியதில் இறந்துள்ளார். இதுவும் காவல் துறையின் கோர முகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

இதற்கு முன்பாக 15ஆம் தேதி, சென்னை புழல்சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த 45 வயது கைதி பாலாஜி உயிரிழந்துள்ளார். அதற்கும் முன்பாக 8ஆம் தேதி, சென்னையை சேர்ந்த 28 வயது ஓட்டுநர் வெங்கடேசன், காவல் துறையின் சித்ரவதையால் உயிரிழந்துள்ளார்.

இப்படி ஒரே மாதத்தில், மாநிலத்தையே அதிர வைத்த 4 லாக்கப் மரணங்கள் நிகழ்ந்துள்ளது.

தி.மு.கழக ஐ.டி. பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

**“கடந்த 5 வாரங்களில் காவல் துறைக் காவலில் நிகழ்ந்த சித்திர வதையால் 4 அப்பாவி உயிர்கள் பலியாகியுள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் நீதிக்காக கதறிக் கொண்டிருக்கையில், இந்த் தன்னடக்கம் இழந்த நிர்வாகி எந்தவித பொறுப்பேற்பும் (accountability), மன்னிப்பும் (apology) இன்றி ஆணவமான மௌனத்தைக் கடைப்பிடிக்கிறார். தனது அரசின் கைகளில் படிந்துள்ள இரத்தத்தை விட, 10-ஆவது மாடியில் உள்ள கடல் காட்சியுடன் கூடிய தனது அலுவலக அறையின் அழகிய தோற்றத்திற்கே அவர் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்.**

**தார்மீக பொறுப்பேற்க மறுப்பு!**

**“பொறுப்பேற்பு (Accountability), பொறுப்பு (Responsibility), மன்னிப்பு (Apology) - இந்த மூன்று கருத்துகளும் அவரது அகராதியிலேயே இல்லாத அந்நியச் சொற்களைப் போன்றவை!**

**தமிழ்நாடு காவல் காவலில் நிகழும் உயிரிழப்புகள், சட்டம்-ஒழுங்கு சீர்கேடுகள் மற்றும் காவிரி நெருக்கடியால் அவதிப்பட்டு வரும் வேளையிலும், இந்த் தன்னடக்கம் இழந்த நபர் வெறுமனே உணர்வற்ற பார்வையுடன் அமர்ந்திருக்கிறார்; எதற்கும் தார்மீகப் பொறுப்பை ஏற்க மறுக்கிறார்.”**

இவ்வாறு தி.மு.கழக ஐ.டி பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

### திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக

# பட்டமளிப்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு அவமரியாதை செய்வதா?

## நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் மு. அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. கண்டனம்!

நெல்லை, ஜூலை.28-

திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு பல்கலைக் கழகம் அமைத்திட வேண்டுமென்ற தென்மாவட்ட மக்களின் எண்ணத்தை அறிந்து புரிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருநெல்வேலியை பூர்வீகமாகக் கொண்ட சைவ வேளாளர் மரபில் உதித்த மனோன்மணியம் என்ற புகழ்பெற்ற நாடகம் இயற்றிய தமிழறிஞர் சுந்தரம் அவர்கள் பெயரில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் என்று 07.09.1990 ல் நெல்லைக்கு அருகே உள்ள அபிஷேகப்பட்டி கிராமத்தில் புதிய பல்கலைக் கழகத்தை அமைத்தார்.



**தமிழ்த்தாய்க்கு பெருமை சேர்த்த கலைஞர்!**

மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய தமிழ்த் தாய் வாழ்த்து தமிழ் நாட்டில், தமிழ்நாடு அரசு சம்பந்தமான அனைத்து விழாக்களிலும், நிகழ்ச்சிகளிலும் முதலில் பாடப்பட வேண்டும் என்று சட்டத்தை இயற்றி தமிழ்த்தாயின் தலைமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்த்தாய்க்கு பெருமை சேர்த்தார்.

28.08.2026 அன்று நடைபெற இருக்கிற மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக 33 வது பட்டமளிப்பு விழாவில் முதலில் வந்தே மாதரம் இரண்டாவதாக தேசிய கீதம், மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து என்று விழா நிகழ்ச்சி நிரலை பல்கலைக் கழக துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

**தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட டெல்லியில் அனுமதி கேட்கும் அவலம்!**

தமிழ்நாடு முதலமைச்சராக விஜய் அவர்கள் பொறுப்பேற்றவுடன், பிரதமர் மோடி அவர்களை டெல்லியில் சந்தித்தபோது தமிழ்த்தாய் வாழ்த்து பாட வழிகாட்டு நெறிமுறைகள் அறிவிக்க வேண்டுமென கேட்டதாக செய்திகள் வெளிவந்தது. அதற்கு பின்பும் தமிழ்நாட்டில் தமிழ்த் தாய் வாழ்த்து முதலில் பாட அனுமதி பெறமுடியாத தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டுக்கு தேவையான வேறு எதையும் பெற்றுத் தர முடியாது என்பதை தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் தமிழ்த் தாய் வாழ்த்து பாட டெல்லியில் அனுமதி கேட்க வேண்டிய தேவையில்லை, தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாட முதலமைச்சரே உத்தரவு பிறப்பிக்கலாம் என்ற அடிப்படையை கூட தெரியாதவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறார்.

இந்தியா ஒன்றியத்தில் ஆட்சி நடத்துகிற பா.ஜ.க. தமிழ்நாடு உயர்கல்வித் துறையை கையில் வைத்திருக்கும் காங்கிரஸ்

தமிழ்நாட்டில் ஆட்சி நடத்திக்கிற தவெ.க அரசு மூன்றுபேரும் கும்பலாக இணைந்து தமிழ்த்தாயை அவமதிக்கும் செயலை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். விரைவில் தக்க பதிலடி கொடுத்து பாடம் புகட்டுவார்கள்.

**தமிழ் மொழியை அழிக்கும் வஞ்சக செயல்!**

தமிழ்வளர்த்த சான்றோர்கள் உலவிய தரணி போற்றும் தாமிரபரணி பாயும் திருநெல்வேலி சீமையில் தமிழ்த்தாய் வாழ்த்து இயற்றிய மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் அமைந்த பல்கலைக் கழகத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்படும் என்ற கவர்னர் மாளிகையின் சர்வாதிகார ஏவல் குரல் கேட்டு வாய்மூடி மௌனமாக இருந்து, தமிழ்மொழியை அழிக்க திட்டமிடும் பா.ஜ.க. வுக்கு வரிந்து கட்டி துணைநிற்கும் த.வெ.க. அரசின் வஞ்சக செயலுக்கு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் மதுரை, கோவையில்

# மெட்ரோ ரெயில் திட்டம் மீண்டும் நிராகரிப்பு!

## ஒன்றிய அரசு அனுமதி மறுப்பு!

சென்னை, ஜூலை 28–

தமிழ்நாட்டில் மதுரை, கோவையில் மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்க மீண்டும் மறுத்துள்ளது.

சென்னையை தொடர்ந்து, மதுரை, கோவை உள்ளிட்ட நான்கு நகரங்களில் மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. கோவையில் 39 கி.மீ. தொலைவுக்கு அவிநாசி சாலையில் கருமத்தம்பட்டி வரையிலும், உக்கடத்தில் இருந்து சத்தியமங்கலம் சாலையில் வலியம்பாளையம் பிரிவு வரையிலும் உயர்மட்டப்பாதையில் மெட்ரோ ரெயில் திட்டம் அமைக்க திட்டமிடப்பட்டது.

மதுரையில் திருமங் கலம் ஒத்தக்கடை வரை 31.93 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்த உள்ளது. 27 கி.மீ. உயர்மட்டப்பாதையில் 23 மெட்ரோ ரெயில் நிலையங்களும், 4.65 கி.மீ. சுரங்கப்பாதையில் 3 மெட்ரோ ரெயில் நிலையங்களும் அமைக்க திட்டமிடப்பட்டது. கோவை, மதுரையில் மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை ஒன்றிய, மாநில அரசிடம் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ஏற்கெனவே வழங்கியது.



**முதல் நிராகரிப்பு**

இதையடுத்து, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியது. அதன்படி, மதுரையில் ரூ.11,360 கோடியிலும், கோவையில் ரூ.10,740 கோடியிலும் மெட்ரோ ரெயில் திட்டங்கள் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு வாயிலாக, ஒன்றிய அரசிடம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து கோவை, மதுரை நகரங்களுக்கான மெட்ரோ ரெயில் திட்டத்துக்கான திட்ட அறிக்கையை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியது.

மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு அனுமதி அளிக்க குறைந்தது 20 லட்சம் மக்கள்தொகை தேவை என்றும், கோவை மற்றும் மதுரையில் 15 லட்சம் மக்கள்தொகை மட்டுமே இருப்பதால் அனுமதி அளிக்க முடியாது எனக் கூறி, திட்ட அறிக்கைகளை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியது.

**2வது முறை**

இதனை தொடர்ந்து மெட்ரோ திட்டம் தொடர்பாக தமிழ்நாடு அரசு கடந்த மே மாதம் மீண்டும் ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்திருந்தது.

இந்த நிலையில், மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரெயில் திட்ட அறிக்கையை ஒன்றிய அரசு மீண்டும் நிரா கரித்து திருப்பி அனுப்பியுள்ளது.

மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்தும் அளவுக்கு மக்கள் தொகை இல்லை எனவும் மதுரை, கோவையில் மெட்ரோ ரெயில் திட்டம் அமைவதால் பயண நேரம் குறைய வாய்ப்பில்லை எனவும் மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு பதில் பேருந்து போக்குவரத்து நடைமுறையை மேம்படுத்தலாம் என ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பரில் நிராகரிக்கப்பட்டு மே மாதத்தில் மீண்டும் அனுப்பப்பட்ட நிலையில், தற்போது 2வது முறையாக நிராகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.